# 2.5 உலகிற்கு ஒளிகொடுத்த திருப்பணியாளர்










★ இப்படங்களைக் கவனமாகப் பாருங்கள்.

★ இவை நாம் வாழும் உலகின் இருள் நிறைந்த அனுபவங்கள்.

★ இங்கு வறுமை, பட்டினி, அநீதி, பிணி முதலியவற்றால் மக்கள் வாடிமடிகின்றனர்.

★ இவர்களுக்கு ஒளியின் பணியினைத் தைரியத்துடன் ஆற்றிட முன்செல்வோர் யார்?



## அன்னை திரேசா

1910 யூகோஸ்லாவியாவில் வாழ்ந்த அல்ஜிரிய நாட்டுக் குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது; எல்லா பெற்றோர்களையும்போல் மிகுந்த மகிழ்ச்சியுடனும் எதிர்பார்ப்புடனும் அவருக்கு அக்னஸ் என்ற பெயர் சூட்டி கடவுளின் நற்கொடையாய் ஏற்றுக் கொண்டனர்.

பன்னிரண்டு வயது நிரம்பும் போது திருப்பணியில் சேர்வதற்கான இறை அழைப்பைப் பெற்றவராக லொரெட்டா நகரில் கன்னியர் மடத்தில் சேர்க்கப்பட்டார். அக்னஸ் என்னும் தன் பெயருக்குப் பதிலாக திரேசா என்ற பெயரைச் சூடிக் கொண்டார். இதற்கான காரணம், பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த புனித திரேசா அம்மையாரின் வாழ்வை அவர் மிகப் போற்றியதால் ஆகும். பின்னர் அயர்லாந்தின் டப்ளின் நகரில் பயிற்சி பெற்று சிறுவயதில் திருச் சகோதரியாக திருநிலைப்படுத்தப்பட்டு இந்தியாவில் பணியாற்றச் சென்றார்.

பதினேழு வருடங்களாக கல்கத்தாவில் கல்லூரியொன்றில் மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வந்தார். எனினும் கல்கத்தா நகரில் வறுமையில் வாழ்ந்த மக்களின் வாழ்நிலை அவரின் உள்ளத்தை உருக்கிற்று. எவ்வித வசதிகளும் இல்லாத போதிலும் இறை நம்பிக்கையுடனும் திடமனதுடனும் சேரிகளில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு ஒரு திறந்த பாடசாலையை ஏற்படுத்தினார்.

1948ம் ஆண்டின் கல்கத்தா வைத்தியசாலையின் வெளியே குற்றுயிராய்க் கிடந்த ஒரு பெண்ணைக் கண்டு, அவர் உயிர்விடும்வரை கரங்களைப் பற்றிக் கொண்டு அங்கிருந்து ஆறுதல் சொன்னார். மரித்தவரின் உதட்டில் அவர் கண்ட புன்சிரிப்பில் அவர் களிப்புற்றார். மரணதறுவாயில் உள்ள மக்களுக்கென ஒரு இல்லத்தை ஏற்படுத்தினார்.

கல்விப் பணியைத் தொடர்ந்து, குடும்பங்கள் மத்தியில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சேரிகளில் இருந்த மக்களின் வாழ்வில் இருந்த இருள் சிறிதுசிறிதாகக் களைய ஆரம்பித்தது.

> *இரக்கப் பணிச் சகோதரிகள்*
> *4000 சகோதரிகள்*
> *517 பணி நிலையங்கள்*
> *100 நாடுகள்*

தனது திருச்சபையின் அனுமதியுடன் **'கருணைப் பணி நிலையம்'** ஒன்றை ஆரம்பித்து அதில் ஆதரவற்றோர் வந்து தங்கும் வசதிகள் செய்து கொடுத்தார். **இரக்கப் பணியின் சகோதரிகள் (Sisters of Charity)** என்ற சமய ஒழுங்கு ஆரம்பிக்கப்பட்டு, உலகின் வறுமைமிக்க நகர்களுக்கு திருச்சகோதரிகள் சென்று பணிபுரிந்தனர். 12 சகோதரிகளுடன் ஆரம்பித்த பணி துரிதமாக வளர்ச்சியடைந்தது. வெள்ளப்பெருக்கு, பஞ்சம்,

போரினால் ஏற்படும் அழிவுச் சூழல், தெருக்களில் வாழ்வோர், சேரிமக்கள் என்போர் மத்தியில் அவர் பணி பரவிற்று. **'சேரிகளின் புனிதர்'** என்று மக்கள் அவரை அழைத்தனர். இவரின் இரக்கப் பணிகளைக் கண்டு வியப்புற்ற உலகம் நோபல் சமாதானப் பரிசை வழங்கிக் கௌரவித்தது.

இவரின் பணி மூலம் உலகின் பல மக்கள் இருள் அகன்று ஒளியின் வாழ்வை மேற்கொள்ள உதவிற்று. இரக்கம் நிறைந்த இதயத் துடிப்போடும் தாழ்மையோடும் உதவிசெய்வதற்கென மக்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுக்கு விடுதலையைக் கொண்டு வருவதற்கு வாழ்நாள் முழுவதும் உழைத்தார். அனைத்து மக்களும் பின்பற்றுவதற்கு ஒரு முன்மாதிரி வாழ்வை வாழ்ந்து காட்டியுள்ளார்.

**திரேசா அம்மையார் நோபல் பரிசு பெற்றுக் கொண்டபோது ஆற்றிய உரையிலிருந்து சில கருத்துக்கள்**

- ஏழை மக்கள் மிக முக்கியமானவரகள். அவர்கள் நமக்கு பல காரியங்களைக் கற்பிக்கக் கூடியவர்களாயுள்ளனர்.
- ஏழைகளுக்கு உதவவேண்டுமெனில் பிறரைப் புரிந்துகொண்டு நமது வாழ்வு செபத்தில் தாபிக்கப்பட வேண்டும்.
- இவ்வுலகில் தேவையற்ற குழந்தைகள் (Unwanted Child) எவருமே கிடையாது.
- உலகில் சமாதானம் வேண்டுமெனில், ஒருவரையொருவர் நேசித்து உங்கள் இல்லங்களில் அமைதியையும், மகிழ்ச்சியையும், ஒருவரையொருவர் பெலப்படுத்துவதையும் ஆரம்பியுங்கள். அப்போது உலகின் அனைத்து தீமைகளையும் மேற்கொள்ளலாம். சமாதானத்திற்கென போர் புரிய வேண்டியிராது.
- உங்களை நிறைவுகளிலிருந்து மேலதிகமானவற்றை எனக்கு வழங்காதீர்கள். உங்கள் குறைவுகளின் மத்தியிலும் மக்களுக்கு உதவி வழங்குங்கள்.

**வாசித்து மகிழுங்கள்**

### அன்னையின் நினைவுகள்

அன்னையின் இரக்கப்பணி நிலையத்தில் சீனி தேவைப்படுகிறதென்று ஒரு சிறுவனின் காதில் விழுந்தது. மூன்று நாட்களாக வீட்டில் அவனுடைய உணவிலோ தேநீரிலோ சீனி வேண்டாமெனக் கூறி, அதனைச் சேமித்தான். சேமித்த சீனியுடன் பெற்றோர்கள் அவனை அம்மையாரிடம் அழைத்துச் சென்று தேவையான சீனியை அன்பளிப்புச் செய்தனர். அவ்வேளை அம்மையார் பெற்றோரிடம், அவர்களது மகன் தனது நன்மைகளைப் பகிர்ந்து கொள்ளக் கற்றுக் கொண்டுள்ளான் என்று கூறி புகழ்ந்தார்.

அம்மையார், மரண தறுவாயிலிருக்கும் மக்களுக்காக நடத்திய இல்லத்தில் வசித்த ஒருவர், ‘நான் நேசிக்கப்பட்டு, முழுப் பராமரிப்புடன் ஒரு தேவதூதனைப்போல் மரிக்கப் போகிறேன்’ என்றார்.

### அன்னையின் சிறப்புக் கருத்து

நம்மால் பெரிதான செயல்களைச் செய்ய முடியாது எனினும் சிறிய செயல்களை பெரிதான அன்புடன் செய்யலாம்.


### அன்னை கூறிய உவமை

### மின் விளக்குகளும் நாமும்

பெரிய, சிறிய மற்றும் சாதாரண, அரிதான மின்விளக்குகள் கம்பிகளை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளன. எனினும் மின்சாரம் அதில் பாயாவிடின் அவை ஒளிதராது. நீங்களும் நானுமே அக்கம்பிகளாவோம். கடவுள் மின்சாரம் ஆவார். எமக்கூடாக மின்சாரத்தைப் பாயவிட்டு உலகை ஒளிர வைக்கும் தெரிவு நமக்கு உண்டு. அல்லதுபோனால் அதனை மறுத்து உலகில் இருள் மேலும் பரவச் செய்யலாம். உங்கள் தெரிவு என்ன?

உலகிற்கு ஒளியைக் கொண்டு வந்த பலரில் இப்போது உலகில் புகழ்வாய்ந்த இன்னொருவர் பற்றி அறிந்து கொள்வோம்.

## மார்ட்டின் லூதர் கிங்



1929ம் வருடத்தில் மைக்கல் லூத்தர் என்ற பெயரில் உலகுக்கு கடவுள் ஒரு அருள்கொடையை வழங்கினார். எனினும் வளர்ந்தபோது அவர் தன் பெயரை மார்ட்டின் லூத்தர் கிங் என மாற்றிக் கொண்டார். குருத்துவப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்து எபநேசர் பப்டிஸ்ட் ஆலயத்தில் பணிபுரிந்தார். பின்னர் இறையியலில் கலாநிதி பட்டம் பெற்றார்.

விரைவில் மனித உரிமைகளில் கரிசனை கொண்டு அமெரிக்க நீக்ரோ மக்களுக்கு தலைமைத்துவத்தைக் கொடுத்தார். ஆபிரகாம் லிங்கன் காலம் முதல் அடிமைத்தனத்திற்கெதிராகச் சட்டங்கள் இருந்தாலும், அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்குச் சமவுரிமைகள் இருக்கவில்லை. அகிம்சைவழிப் புரட்சியில் மக்களை வழிநடத்தினார். அமெரிக்காவில் போக்குவரத்து போன்ற பொதுச் சாதனங்களில் கறுப்பின மக்களுக்கும் சமவுரிமையுண்டு என்று போராட்டங்களை ஆரம்பித்தார்.

நகர சுத்திகரிப்பு பணியாளரின் உரிமைகளுக்காகப் பாடுபட்டார். அங்கு அவர் நல்ல சமாரியனின் உவமையில் இருந்து எடுத்துக்கூறிய கருத்து நமதுள்ளங்களைத் தொடுகிறது. கள்வர் கையில் அகப்பட்ட மனிதன் குற்றுயிராய்க் கிடக்கும் வேளையில், அவருக்கு உதவிசெய்ய முன்வந்தால் ‘‘நமக்கு என்னவாகும்?” என்று கேட்பதைவிட, ‘‘அந்த மனிதனுக்கு உதவி செய்யாவிட்டால் அவருக்கு என்ன நடக்கும்?” என்பதே சரியான கேள்வி என்று கூறினார். எனவே, ‘‘இன்று நான் இந்த நகர சுத்தி பணியாளருக்கு உதவிசெய்யாவிட்டால் அவர்களுக்கு என்ன நடக்கும்?” என்று வினவினார். உலகப் பிரசித்திப் பெற்ற இந்த இறுதி உரையில் அவர் மேலும் கூறியதாவது:

‘‘எந்த நேரத்தில் என் உயிருக்கு என்ன நடக்கும் என்று கூறமுடியாது. உலகில் எந்த ஒரு நபரும் அதிகக் காலம் வாழ்வதற்கு விரும்புவது இயல்பு. எனினும் பரவாயில்லை; நான் ‘மலையுச்சியை’ அடைந்துவிட்டேன். விடியலை நான் காண்கிறேன். மக்களுக்கு விடுதலை கிட்டுவது உறுதி”.

இங்கு இவர் மோசே மலையுச்சியில் இறைத்தரிசனம் பெற்றதை ஒப்பிட்டுக் கூறினார். இப்போது **‘மலையுச்சி அனுபவம்’** என்பது மக்களின் ஆன்மீக ஒளி பெறுவதை விளக்கும் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

சில மாதங்களின் பின்பு அவர் நான்காவது அனைத்துலக திருச்சபை மன்றத்தில் அருளுரை ஆற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார். அந்நாட்களில் நிலவிய பொருளாதார அநீதி, இனவெறி, நிறவெறி என்பவற்றுக்கு எதிராக அமெரிக்க பொதுமக்களின் உரிமைகள் இயக்கத்தை பாரிய சக்தியாக மாற்றியிருந்தார். எனினும் 1968ம் ஆண்டு ஜுலை 4ம் திகதி மெம்பிஸ் நகரில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரின் சுயநலமற்ற தைரியமான அமைதியான போராட்டங்களை மதித்து அவருக்கு நோபல் சமாதான பரிசு வழங்கப்பட்டது. அனைத்துலக திருச்சபை மன்றத்தில் அவரால் ஆற்ற முடியாது போன உரையை ஆற்ற வேண்டிய பொறுப்பு இலங்கையைச் சேர்ந்த D.T நைல்ஸ் போதகருக்கு வழங்கப்பட்டது. அடுத்து நைல்ஸ் போதகரைப் பற்றி பார்ப்போம்.

**வாசித்து நினைவில் கொள்ளவும்**

**உலகிற்கு ஒளியைக் கொண்டு வந்த இலங்கைதேசத் திருப்பணியாளர் அருள்திரு. கலாநிதி D.T. நைல்ஸ்**

அருள்திரு. கலாநிதி. D.T நைல்ஸ் உலகலாளவிய மட்டத்தில் திருச்சபைக்கு தலைமைத்துவம் கொடுத்த இலங்கையராவார். இவர் ஆசிய திருச்சபை மன்றத்தின் தலைவராகவும், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவராகவும் பணிபுரிந்தார். உலகளாவிய திருச்சபையின் தலைவராயிருக்கும் வேளையிலும் யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளையில் தனது அலுவலகத்திலிருந்தே செயல்பட்டார்.

உலகத் திருச்சபையின் மட்டத்திலும் இலங்கைத் திருச்சபையின் மட்டத்திலும் திருச்சபை ஒருமைப்பாட்டியகத்தில் முக்கிய பங்கு வகித்தார். இலங்கையில் திருச்சபைகள் ஒன்று சேர்ந்து 'கற்றல் மற்றும் உரையாடலுக்கான ஒருமைப்பாட்டு நிறுவனத்தை' (Ecumenical Institute for Study and Dialouge) ஆரம்பிப்பதில் அதிக ஒத்துழைப்பு வழங்கினார்.

1948ம் ஆண்டில் முதலாவது ''அனைத்துலக திருச்சபை மகாநாடு'' அம்ஸ்ட்டர்டாம் நகரில் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஆரம்ப ஆராதனையில் அருளுரை ஆற்றுவதற்கு அழைக்கப்பட்டமை இவரின் ஆற்றலுக்கான சான்றாகும்.

1968ம் ஆண்டில் மார்டின் லூத்தர் கிங் அவர்களுக்குப் பதிலாக திரும்பவும் நான்காவது 'அனைத்துலக திருச்சபை மாநாட்டில்' அருளுரை ஆற்ற அழைக்கப்பட்டார்.


இலவச விநியோகத்திற்காக

1960ம் ஆண்டில் **'விசுவாசத்தின் சகோதரர்'** என்ற ஸ்டீபன் நீல் ஆயர் எழுதிய நூலில், 23வது பாப்பு ஜோன், பேராயர் உவில்லியம் டெம்பிள், ஜோன் ஸ்பொட் என்போரின் பெயர்களோடு, அருள்திரு நைல்ஸ் போதகரின் பெயரும் 20ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ ஒற்றுமைக்கான முன்னணித் தலைவர்களில் ஒருவராக குறிப்பிடப்பட்டுள்ளமை ஓர் அரிய நிகழ்வாகும்.

பல சிறப்பான கிறிஸ்தவ நூல்களை எழுதி மக்கள் மத்தியில் கிறிஸ்தவ விசுவாசத்தை ஆழமாக எடுத்து விளக்கினார்.

இந்தியாவில் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் மரணமடைந்தார். அவரின் மரண ஆராதனை அவர் விருப்பத்திற்கிணங்க அங்கேயே நடைபெற்றது. அவ்வேளையில் அலன் பிராஷ் கூறிய வார்த்தைகள்

''அவரின் அருகில் இருக்கும்போது கடவுள் மீது நம்பிக்கை வைப்பது இலகுவாயிருந்தது.''

''அவருடன் சேர்ந்து மிகச் சிக்கலான காரியத்தையும் செய்வது மிக இலகுவாயிருந்தது.''

''அவரின் செபமும், மன்னிக்கும் தன்மையும், ஆழ்ந்த விசுவாசமும் நாம் தொட்டு உணரும் காரியங்களைவிட மிக அதிகமாக உணரக்கூடியதாக இருந்தன.''

## செயல்பாடு

1. *திரேசா அம்மையாரின் பணியின் மூலம் வாழ்வில் ஒளிபெற்ற மக்கள் குழுவினர் யாவர்?*
2. *மார்டின் லூதர் கிங் அகிம்சை முறையில் கொண்டு நடத்திய போராட்டத்தினை விளக்குக.*
3. *மாணவர் என்ற முறையில் நீர் செய்யக்கூடிய ஒளியின் பணி என்ன?*
4. *உங்கள் வகுப்பு மாணவர்கள் சேர்ந்து செய்யக்கூடிய சமூகத்தின் நல் வாழ்விற்கான ஒளியின் பணியொன்றினைப் பற்றி அறிக்கை தயாரிக்கவும்.*